நகர்மன்றம்
உதகமண்டலம்
30–09–2021.

அன்புடையீர்:

வணக்கம். இந்நகராட்சியின் செப்டம்பர் 2021–ம் மாத சாதாரண கூட்டம் வருகிற 30.09.2021 அன்று காலை 11.00 மணியளவில் தனி அலுவலர், அவர்களின் தலைமையில் கூட்டம் நடைபெறுவதால், மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இத்துடன் கூட்டப் பொருள்கள் இணைக்கப்பட்டுள்ளன.

**1.** இந்நகராட்சியில் உட்பட்ட வார்டு எண் 28ல் முள்ளிக்கொரையில் உள்ள நகராட்சி பள்ளி வளாகத்தில் வீடற்ற நகர்புற ஏழைகள் தங்கும் விடுதி (NULM –SUH) அமைக்கப்பட்டு உள்ளது. இந்த விடுதியில் உதகை நகர் பகுதியில் உள்ள வீடற்ற ஏழைகள் 45 நபர்கள் தங்க வைத்து அவர்களை பராமரிக்க ஓராண்டிற்கு (2020–2021) ஆகும் செலவினத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை கடித எண் ந.க.எண் 38038/2013 (UPA2–2), நாள் .25.02.2021ல் ஒர் ஆண்டிற்கு (NULM-SUG) நகர்புற ஏழைகள் தங்கும் விடுதியினை பராமரிப்பு செய்வதற்கான செலவினத்திற்கு ரூ.5.40 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பராமரிப்பு செலவு மேற்கொள்ள ரூ.5.40 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதனை தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கு பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. **நகர்புற ஏழைகள் தங்கும் விடுதியில் (NULM-SUG) 45 நபர்களை தங்க வைத்து பராமரிப்பு செய்ய ரூ.5.40 இலட்சத்தினை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதனை பதிவு செய்யலாம்.**
   **(ந.க.எண்.இ5/7672/2018)**
   **தீர்மான எண்.2748 – அனுமதிக்கப்பட்டது**

**2.** இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 28 முள்ளிக்கொரையில் உள்ள நகராட்சி பள்ளி வளாகத்தில் வீடற்ற நகர்புற ஏழைகளுக்கான தங்கும் விடுதி (NULM-SUH) அமைக்கப்பட்டு அதில் வீடற்ற நகர்புற பகுதியில் உள்ள ஏழைகள் 45 நாட்கள் தங்க வைக்கவும் அவர்களை தங்கவைத்து பராமரிக்க 2020–2021 ஆம் ஆண்டிற்கு பராமரிக்க ஆகும் செலவினங்களுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண் 38233/2013/UPA2-2, நாள் 25.09.2020ல் ஆண்டிற்கு ரூ.5.40 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி தங்கும் விடுதியினை பாரமரிக்க Dr. அப்துல் கலாம் கல்வி மற்றும் பசுமை அறக்கட்டளை அவர்களுக்கு நகர் மன்ற தீர்மான எண்.2230 நாள் .04.09.2020ல் அனுமதி வழங்கப்பட்டு 27.08.2021 உடன் பாரமரிப்பு காலம் முடிவடைந்துள்ளது. மேலும் தங்கும் விடுதியினை பராமரிக்க Dr.அப்துல் கலாம் கல்வி மற்றும் பசுமை அறக்கட்டளை நிறுவனம் தொடர்ந்து ஒராண்டு நடத்த அனுமதி வழங்குமாறு கோரியுள்ளார். எனவே மேற்படி தங்கும் விடுதியினை மேலும் (28.08.2021 முதல் 27.08.2020) வரை ஒராண்டிற்கு பராமரிக்க அனுமதி வழங்க தனி அலுவலலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. **Dr.அப்துல் கலாம் கல்வி மற்றும் அறக்கட்டளை நிறுவனத்தில் மூலம் ஆதாரவற்றோர்கள் 45 நபர்களை நடப்பாண்டிற்கு (28.08.2021 முதல் 27.08.2022 வரை) நிதி ஒதுக்கீட்டினை எதிர்நோக்கி பராமரிக்க அனுமதி வழங்கலாம்.**
2. **மேற்படி அறக்கட்டளையில் தொடர்ந்து ஆதாரவற்றோர்களை பராமரித்து வருவதினால். தொடர் பராமரிப்பு பணிகளை கவனிக்க தனி அலுவலர் அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி ஆணையர் (ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் பராமரிப்பு பணிகளை நடப்பாண்டிற்கு 28.08.2021 முதல் 27.08.2022 வரை மேற்கொள்ள உத்திரவு வழங்கியதையும் தனி அலுவலர் அங்கீகரிக்கலாம்.**
   **(ந.க.எண்.இ5/7677/2018)**
   **தீர்மான எண்.2749 – அனுமதிக்கப்பட்டது**

**3.** இந்நகராட்சியில் 27–08–2021 அன்று ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோரியதில் வரப்பெற்ற ஏலப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை இலட்சத்தில் | ஏலம் கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் தொகை | ஏலம் கோரியுள்ள ஒப்பந்ததாரரின் தொகை |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி பகுதியில் தெருவிளக்குகள் பராமரிப்பு பணிகள் மேற்கொண்டதில் சோடியம் ஆவி விளக்குகள், மெடரகுரி ஆவி விளக்குகள் மற்றும் உயர் கோபுர சோடியம் விளக்குகள் ஆகியவை தற்பொழுது அலுவலக சேமிப்பு கிடங்கில் இருப்பிர் உள்ளதை ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோரும் பணி. | – | 1.திரு.ஏ.கே.கோயா, காந்தள் முக்கோணம்,உதகை. | ரூ.28.50/– |
| | | | 2.திரு.காஜாகபீர் அகமத் கா, கோபி ஈரோடு. | ரூ.7500/– |
| | | | 3.திரு.சையத் இப்ராஹிம், கோவை மாவட்டம். | ரூ.7500/– |
| | | | 4.திரு.ஐயப்பன், கோபிசெட்டிபாளையம். | ரூ.7500/– |
| | | | 5.திரு.காஜா முகம்மது கபீர்கா, கோபிசெட்டிபாளையம். | ரூ.7500/– |
| | | | 6.திரு.நிசரா அஹமத், பழைய அக்ரஹாரம், உதகை. | ரூ.7500/– |
| | | | 7.திரு.அப்துல் ரசீது, பழைய அக்ரஹாரம், உதகை. | ரூ.27.00/– |
| | | | 8.திரு.எஸ்.சந்திரன், மேட்டுப்பாளையம். | ரூ.7500/– |
| | | | 9.திரு.ஏ.கே.அப்துல் ரஹ்மான், மேட்டுப்பாளையம். | ரூ.28.00/– |
| | | | 10.திரு.முகம்மது யூசப், மேட்டுப்பாளையம். | ரூ.7500/– |
| | | | 11.திரு.சாகுல் ஹமீது, மேட்டுப்பாளையம். | ரூ.26.00/– |
| | | | 12.திரு.ஏ.கே.டிரேடர்ஸ், மேட்டுப்பாளையம். | ரூ.31.00/– |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 13.திரு.எஸ்.ஆர்.எஸ்.டிரேடர்ஸ், மேட்டுப்பாளையம். | ரூ.7500/– |
| | | | 14.திரு.எம்.ஏ.கரீம் (எம்.எம்.எம்.டிரேடர்ஸ்), மேட்டுப்பாளையம். | ரூ.7500/– |
| | | | 15.திரு.சாதிக் பாஷா, ரோஹினி பின்புறம். | ரூ.28.50/– |
| | | | 16.திரு.முகமது அப்பாஸ். கோபிசெட்டிபாளையம். | ரூ.7500/– |
| | | | 17.திரு.அருண்குமார், சத்தியமங்கலம். | ரூ.7500/– |
| | | | 18.திரு.நந்தகுமார், சத்தியமங்கலம். | ரூ.7500/– |
| | | | 19.திரு.பிரகாஷ், மேட்டுப்பாளையம். | ரூ.7500/– |
| | | | 20.திரு.சையதுஅபுத்தாகிர், மேட்டுப்பாளையம். | ரூ.7500/– |
| | | | 21.திரு.பாலசுப்ரமணியன், ஈரோடு. | ரூ.7500/– |
| | | | 22.திரு.ஆழ்வார்சாமி, மேட்டுப்பாளையம். | ரூ.7500/– |
| | | | 23.திரு.கே.அசன், பழைய அக்ரஹாரம். | ரூ.30.00/– |
| | | | 24.திரு.பன்னீர்செல்வம், ஈரோடு. | ரூ.26.50/– |
| | | | 25.திரு.சி.குப்பன், ஈரோடு. | ரூ.29.00/– |
| | | | 26.திரு.பர்கத்துல்லா, பழைய இரும்புக்கடை, உதகை. | ரூ.31.50/– |

மேற்கண்ட பணிக்கு அதிக ஏலம் கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஏலத்தை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு** :-

1. **தனி அலுவலர் ஏற்கலாம்.**
2. **அதிக ஏலத் தொகை கோரிய ஏலத்தாரருக்கு அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் தனி அலுவலர் அங்கீகரிக்கலாம் (ந.க.எண்:இ4/4217/2021)**

**தீர்மான எண்.2750 – அனுமதிக்கப்பட்டது**

**4.** தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு 2021–22 நகராட்சிகளில் விளையாட்டுத் திடல்கள் மற்றும் பூங்காக்கள் மேம்படுத்துவது தொடர்பாக மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் 2021–22 ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்டத் தொடரில் நகராட்சி நிர்வாக துறை மான்ய கோரிக்கையின் போது பொதுமக்களின் நலனுக்காகவும் சிறுவர்களுக்காகவும் விளையாட்டு திடல்கள் மற்றும் பூங்காக்கள் மேம்படுத்த கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண்.ந.க.எண்.20028/2021/தி2 நாள்.08.09.2021 அன்று கடிதம் அனுப்பியுள்ளார்கள், அதன் அடிப்படையில் இந்நகராட்சிக்கு சொந்தமான டேவிஸ்பூங்கா மேம்படுத்த தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.98.00 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி கோரவும் மேலும் மேற்கண்ட தொகையினை முழு மானியமாக வழங்க கோரியும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரைகள் அனுப்ப தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. **தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.**
   **(ந.க.எண்.இ5/6846/2021)**
   **தீர்மான எண்.2751 – அனுமதிக்கப்பட்டது**

**5.** தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு 2021–2022 நிதியாண்டின் கீழ் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்ற கூட்டத் தெடரின் நகராட்சி நிர்வாக துறை மான்ய கோரிக்கையின் போது போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் மற்றும் வேலை தேடும் இளைஞர்களுக்கு ஏதுவாக உள்ளாட்சி அமைப்புகளில் நூலகங்கள் மற்றும் அறிவுசார்மைப்பாளர்கள் அமைக்க கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண்.ந.க.எண்.20027/2021/தி2 நாள்.08.09.2021–ன் படி உதகமண்டலம் நகராட்சியில் அமைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் பேரில் நகராட்சிக்கு சொந்தமான காந்தல் பகுதியில் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டு அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.225.00/– இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்க கோரியும் மேற்கண்ட தொகையினை முழு மான்யமாக வழங்க கோரியும் நகாரட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரைகள் அனுப்ப தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. **தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.**
   **(ந.க.எண்.இ5/6845/2021)**
   **தீர்மான எண்.2752 – அனுமதிக்கப்பட்டது**

**6.** இந்நகராட்சியின் குடிநீர் மற்றும் வடிகால் கீழ் காணும் பணிகளுக்கு 23.09.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு கூட்டத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்.** | **பணியின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை ரூ. லட்சத்தில்** |
|---|---|---|
| 1. | இந்நகராட்சி TN43K1696 வாகனம் பழுது சரி செய்யும் பணி | ரூ.1.58 |

| **வ.எண்.** | **ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவிகிதம்** | **குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரிக் பெயர் மற்றும் தொகை** |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1. | Nilgiri Auto Garage Kotagiri road, Mettupalayam, Rs.1,57,300/- | Nilgiri Auto Garage Kotagiri road, Mettupalayam, Rs.1,57,300/- |
| 2. | Mettupalayam Auto Service centre tiruppur. Rs.1,59,000/- | |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரின் ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலர் ஏற்கலாம்.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. **தனி அலுவலர் ஏற்கலாம்.**
2. **குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கலாம்.**

**(ந.க.எண்.இ4/3182/2021)**

**தீர்மான எண்.2753 – அனுமதிக்கப்பட்டது**

7. இந்நகராட்சியின் குடிநீர் மற்றும் வடிகால் கீழ் காணும் பணிகளுக்கு **23.09.2021** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு கூட்டத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்.** | **பணியின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை ரூ. லட்சத்தில்** |
|---|---|---|
| 1. | TN43F4793 இந்நகராட்சி வாகனம் பழுது சரி செய்யும் பணி | ரூ.**1.47** |

| **வ.எண்.** | **ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவிகிதம்** | **குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரிக் பெயர் மற்றும் தொகை** |
|---|---|---|
| 1 | Nilgiri Auto Garage Kotagiri road, Mettupalayam, Rs.1,46,600/- | Nilgiri Auto Garage Kotagiri road, Mettupalayam, Rs.1,46,600/- |
| 2 | Mettupalayam Auto Service centre tiruppur. Rs.1,48,700/- | |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரின் ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலர் ஏற்கலாம்.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. **தனி அலுவலர் ஏற்கலாம்.**
2. **குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கலாம்.**

**(ந.க.எண்.இ4/3465/2021)**

**தீர்மான எண்.2754 – அனுமதிக்கப்பட்டது**

**8.** உதகமண்டலம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரியும் மருத்துவ பணியாளர்கள், துப்புரவு மேற்பார்வையாளர்கள், தூய்மைப் பணி வாகன ஓட்டுநர்கள், பொது பணி கடை நிலை பணியாளர்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு **2021-2022**ம் ஆண்டிற்கு தீபாவளி பண்டிகை முன்னிட்டு **200** கம்பிளிகள் மற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு ஒரு ஜோடி காலணிகள் ஆண் **44** நபர்களுக்கு மற்றும் பெண் தூய்மைப் பணியாளர்களுக்கு **99** நபர்களுக்கு கொள்முதல் செய்து வழங்க உத்தேச செலவினம் ரூ.**9,00,000/-** தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் அரசு நிறுவனங்களிடம் இருந்து கொள்முதல் செய்யவும் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:—</u>

1. **தனி அலுவலர் அனுமதி அளிக்கலாம்.**
**(ந.க.எண்.எச்2/9912/2021)**
**தீர்மான எண்.2755 — அனுமதிக்கப்பட்டது**

**9.** இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சுற்றுலா பயணிகள் அதிகரித்து வரும் நிலையில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் முகக்கவசம் மற்றும் சமூக இடைவெளி கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டியும் அதனை மீறினால் அபராதம் என்ற வாசகம் கொண்ட பேனர்கள் 60 எண்கள் அச்சிட செய்யும் பொருட்டு , அவசர அவசியம் கருதி நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15 கீழ் மேற்படி பேனர்களுக்கு உள்ளூர் அச்சகத்தாரர்களிடமிருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது அதன் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | விலைப்புள்ளி பெயர் விலாசம் | பேனர்கள் ஒன்றுக்கு | தேவையான அளவு | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | திருவாளர்.குட்லக் பிரிண்டிங் பிரஸ் - அப்பர்பஜார், உதகை | பேனர்கள் (2*3) - ரூ.290/- | 50 எண்கள் | ரூ.14,500/- |
| | | பேனர்கள் (8*5) - ரூ.1700/- | 10 எண்கள் | ரூ.17,000/- |
| 2 | திருவாளர். சன் கிரப்பஸ், மெயின் பஜார் , உதகை | பேனர்கள் (2*3) - ரூ.318/- | 50 எண்கள் | ரூ.15,900/- |
| | | பேனர்கள் (8*5) - ரூ.2050/- | 10 எண்கள் | ரூ.20,500/- |
| 3 | திருவாளர். மாடன் பிரண்டர்ஸ், அப்பர்பஜார் , உதகை | பேனர்கள் (2*3) - ரூ.310/- | 50 எண்கள் | ரூ.15,500/- |
| | | பேனர்கள் (8*5) - ரூ.1900/- | 10 எண்கள் | ரூ.19,000/- |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளி திருவாளர். குட்லக் பிரிண்டிங் பிரஸ் - அப்பர்பஜார், உதகை அவர்களின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் மேற்படி பொருட்களின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் 60 எண்கள் கொண்ட பேனர்களுக்கு , இதற்குண்டான செலவினம் மேற்கொள்ளப்பட்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைத்து மன்றக் கூட்டத்தின் ஒப்பதலுக்கு .

<u>அலுவலக குறிப்பு:—</u>

1. **மேற்கண்ட பொருட்கள் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் பதிவு செய்யலாம்.**
**(ந.க.எண். எச்2/3261/2019)**
**தீர்மான எண்.2756 — அனுமதிக்கப்பட்டது**

**10.** இந்நகராட்சிக்கு சொந்தமான சந்தை உட்புறம் உள்ள மற்றும் வெளிப்புறம் உள்ள கடைகளின் நிலுவை தொகையினை செலுத்தக் கோரியது தொடர்பாக அறிவிப்பினை தினதந்தி நாளிதழில் வெளியிட்டமைக்கான கட்டணத் தொகை ரூ.23,625/— மேலாளர், தினத்தந்தி நாளிதழ், கோவை அவர்களுக்கு வழங்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. **தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.**
**(ந.க.எண்.அ7/708/2021)**
**தீர்மான எண்.2757 – அனுமதிக்கப்பட்டது**

11. அரசாணை (நிலை) எண்.84 மனிதவள மேம்பாடு (FR-III) துறை நாள்.23.08.2021 தனி அலுவலர் பார்வைக்கும் பதவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. **தனி அலுவலர் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.**
**(ந.க.எண்.சி1/7097/2021)**
**தீர்மான எண்.2758– அனுமதிக்கப்பட்டது**

12. அரசாணை (நிலை) எண்.92 மனிதவள மேம்படு (FR-II) துறை நாள்.13.09.2021 தனி அலுவலர் பார்வைக்கும் பதவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. **தனி அலுவலர் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.**
**(ந.க.எண்.சி1/7098/2021)**
**தீர்மான எண்.2759 – அனுமதிக்கப்பட்டது**

13. இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.7ல் பழைய உதகை பகுதியில் கிருஷ்ணர் கோவில் அருகில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான பொதுக் கழிப்பிடத்தின் Closet, கழிப்பறையின் கதவுகள், கழிப்பிடத்தின் மின்சார வசதி மற்றும் கழிப்பிடத்தை பயன்படுத்த தண்ணீர் குழாய்கள் ஆகியவை முற்றிலும் பழுதடைந்து உள்ளதால் அப்பகுதியில் உள்ள பொதுமக்களால் இந்த கழிப்பிடத்தை முற்றிலும் பயன்படுத்த முடியாமல் மிகவும் பழுதடைந்து உள்ளது. எனவே மேற்கண்ட கழிப்பிடத்தின் பழுதுகளை சரி செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.7.05/– இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியின் கீழ் பணி செய்ய தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. **மேற்கண்ட பணிக்காக செலவுத் தொகையை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்.**
2. **கூட்டப்பொருள் அனுமதிக்காக.**
**(ந.க.எண். /2021)**
**தீர்மான எண்.2760 – அனுமதிக்கப்பட்டது**

14. உதகமண்டலம் நகராட்சி பொறியாளர் குடியிருப்பில் RCC மேற்கூரை மற்றும் தரை தளத்தில் ஒட்டியுள்ள Floor mat மிகவும் பழுதடைந்துள்ளது. எனவே பழுதடைந்துள்ள RCC மேற்கூரை தரை தளத்தில் ஒட்டியுள்ள Floor mat, குடிநீர் குழாய் இணைப்பு மற்றும் குடியிருப்பிற்கு வர்ணம் பூடிச புதுப்பிக்கம் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1.70/– இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியினை நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. **அனுமதி வழங்கலாம்**

2. **மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்**

**(ந.க.எண். /2021)**

**தீர்மான எண்.2761 – அனுமதிக்கப்பட்டது**

**15.** உதகமண்டலம் நகராட்சியில் தினசரி மார்கெட் நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ளதால் அப்பகுதியில் அதிக அளவில் பொதுமக்கள், சுற்றுலா பயணிகள் அடிக்கடி கூடும் முக்கிய இடமாக உள்ளதால் அப்பகுதியில் வாகன நெரிசல் ஏற்படுகிறது. எனவே பொதுமக்கள் நலன் கருதி **5.64** ஏக்கர் பரப்பளவில் உள்ள நகராட்சி சந்தையில் கார் பார்க்கிங் உடன் கூடிய கடைகள் (வணிக வளாகம் மற்றும் கார் பார்க்கிங்) கட்டுவதற்கு தேவையான மாதிரி வடிவமைப்பு, வரைபடங்கள் மற்றும் Desgin, 3D Views ஆகியவற்றை தயாரிக்க கோரி மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் **22.09.2021** அன்று நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் கூறியுள்ளார். அதன் அடிப்படையில் முதற்கட்டமாக கலந்தாலோசகர் மூலம் 3D rendered prespective views & 3D rendered realistic walkthrough தயாரிக்க ஆகும் தோராய செலவினம் ரூ.**4,50,000/–** + GST **4,99,000/–** க்கு அனுமதி வேண்டப்படுகிறது– மேற்கண்ட பணியினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது–

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. **தனி அலுவலர்அனுமதி வழங்கலாம்**

**(ந.க.எண்.இ5/5550/2021)**

**தீர்மான எண்.2762 – அனுமதிக்கப்பட்டது**

**16.** உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் (swatch bharath mission) திட்டத்தில் 6th SHPC திட்டத்தின் கீழ் **6** இடங்களில் (Micro composting centre) நுண்ணுயிர் உரமாக்கும் மையங்கள் கட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட MCC கட்டிடங்களில் மக்கும் குப்பைகளை (wet waste) சேகரித்து **120** நாட்கள் ஆகிய நிலையிலும் ஈரகுப்பைகள் மக்காத நிலையிலேயே உள்ளது. உதகை நகர் பகுதியில் தட்ப வெப்பநிலை காரணமாக அடிக்கடி மழை பெய்து வருவதினால் குப்பைகளை எளிதில் உரமாக்க இயலாத சூழ்நிலை உள்ளது. **27.07.2021** அன்று நகராட்சி நிர்வாக ஆணையரக இணை இயக்குநர் (நிர்வாகம்) சென்னை அவர்கள் 3TPD Micro composting centre காந்தல் நேராய்வு உரமாக்கும் மையத்தில் சோலார் டிரையர் (Solar dryer) அமைத்து குப்பைகளை உலர்த்தி உரமாக்கும் படி அறிவுறுத்தியுள்ளார். எனவே மேற்கண்ட பணியினை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.**4,00,00/–**க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணியினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. **தனி அலுவலர்அனுமதி வழங்கலாம்.**
2. **மேற்கண்ட பணியினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம்.**
3. **மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அனுமதி எதிர்நோக்கி நகராட்சி ஆணையாளர் (ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி ஆணை வழங்கி பணி மேற்கொள்ள அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.இ5/5475/2021)**

**தீர்மான எண்.2763 – அனுமதிக்கப்பட்டது**

**தனி அலுவலர் (ம)ஆணையாளர்,**
**உதகமண்டலம் நகராட்சி.**